அந்நஜாத் மே 1993 இதமுடன் இணைக்கப்பட்டிருந்த "புரோகிதர்களைப் புரிந்து கொள்ளுங்கள்" என்ற இலவச இணைப்பு, பக்கம் 146.

## K.M.I.க்கு அவரது மாணவர் கடிதம்

09.01.1988

எனது அன்பிற்கும் மரியாதைக்கும் உரிய உஸ்தாத் K.M.Iqbal Madani அவர்களுக்கு தங்களின் மாணவன் மீறான் எழுதும் மடல், அல்லாஹ் கிருபையால் நலம்; நலம் விளைய துவா.

நம் இருவரையும் தீனின் அடிப்படையில் தான் அல்லாஹ் இணைத்து வைத்தான். அதுபோல் தீன் அடிப்படையிலேயே பிரிய நேரிட்டது. ஆரம்பக் காலத்தில் ஷிர்க், பித்அத்துகளைக் கண்டித்தது மட்டு மல்லாமல் மத்ஹபுகளைக் கண்டித்தது மட்டுமல்லாமல் மத்ஹபுகளை விமர்சித்துக் கூறினீர்கள். மார்க்கத்தில் பிளவு இல்லை ஒரே நேர்வழிதான். அது தான் தீனுல் இஸ்லாம் என்று பலமுறை கூறியுள்ளீர்கள்.

அது மட்டுமல்ல தாங்கள் தீன் அடிப்படையில் தவறு செய்யும் பொழுது அதனைத் தக்க ஆதாரங்களுடன் நிரூபிக்கும் பொழுது அதனை ஏற்றுக் கொண்டீர்கள். அதைத் திருத்தியவருக்காக அந்த மஜ்லிஸில் துவாவும் செய்து உள்ளீர்கள் என்பதை என்னை விட கூடுதலாகத் தாங்கள் அறிவீர்கள். எனக்கு நல்ல ஞாபகம் உள்ளது. மௌலிதின் மூன்றாவது பாகமாக விளங்கும் ஒரு கேஸட்டில் தாங்கள் சொற்பொழிவு ஆற்றும்பொழுது உமர்(ரழி) அவர்களின் ஆட்சிக் காலம் எத்தனை ஆண்டுகள் என்ற கேள்வி வரும்பொழுது சகோதரர் குத்புத்தீன் அதற்கான விடையைத் தருகிறார். அது சமயம் தாங்கள் அவர் சொல்வதை நாம் ஏற்கிறோம். காரணம் அவர் நம்மை விடக் கூடுதலாகப் படிக்கிறார் என்றும் கூறினீர்கள். மேலும் நான் தங்கள் கேஸட்டை வீட்டிற்கு வந்து மீண்டும் எடிட் செய்துள்ளேன். தவறு இருந்தால் மறு நாள் வகுப்பில் திருத்திக் கூறியுள்ளீர்கள். அவ்வாறு எடிட் செய்தது நான் உங்களை விடக் கூடுதலாக படித்து விட்டேன் என்பதைக் காட்டுவதற்கு அல்ல. மாறாக அதில் தவறு இருந்து அதைக் கேட்பவர் அதன்படி செயல்பட்டு விடக் கூடாதே என்ற ஒரே எண்ணம்தான். அதையும் தாங்கள் மறுக்கவில்லை. இந்தத் தவறை தவறு என்று ஏற்றுக் கொள்ளும் நற்பண்புதான் என்னை உங்களிடம் அதிக நெருக்கத்தை ஏற்படுத்தியது. பலர் என்னை உங்களின் முகல்லிதாகவே கருதினர். ஆனால் என்னைப் பொறுத்தவரைத் தாங்கள் தவறு செய்யும் பொழுது அல்லாஹ் எனக்குக் கொடுத்த அறிவை வைத்துக் கண்டித்திருக்கிறேன். மறைமுகமாகவும், நேரிலும் பலமுறை செய்துள்ளேன். அல்லாஹ் மிக அறிந்தவன்.

நஜாத் பத்திரிகை வெளிவருவதற்குண்டான ஆயத்தங்கள் எல்லாம் செய்த பிறகு சகோதரர் குத்புத்தீன் யோசனையின் அடிப்படையில் (IAC) அசோஷியேசன் அமைக்கப்பட்டது. அதன் முதல் கூட்டத்திலேயே நான் இது வரை நமக்குள் எந்தப் பிளவுகளும் இல்லை; இனிமேல் தான் பட்டம் பதவி என்றவுடன் நிச்சயம் ஷைத்தான் அவன் வேலையைக் காட்டுவான் என்று கூறியது தங்களுக்கும் ஞாபகம் இருக்கும். அதுதான் உண்மையாகி விட்டது.

நம்மிடையே பிளவு ஏற்படக் காரணம் 'சலபி' பிரச்சனைதான்; வேறு எந்த லோகாதாய காரணமும் இல்லை; வெறும் 'சலபி' என்று பெயர் வைப்பதில் வரவில்லை. "சலபு சாலிஹீன்களை" பின்பற்றலாம் என்ற கொள்கை கூடுமா? கூடாதா? என்பதுதான் நமக்குள் ஏற்பட்ட பிரச்சனை. பலமுறை நானும் சகோதரர் குத்புத்தீனும் "சலபி அகீதா" கூடாது என்று ஆதாரத்தோடு கூறினோம். "அகீதத்துல் இஸ்லாமிய்யா" என்றுதான் உண்டே தவிர "அகீதத்துல் சலபிய்யா" என்று இருக்கக் கூடாது என்று வாதாடினோம். அதன் பிறகு சலபியை எப்படியும் அந்நஜாத்தில் புகுத்தி விட வேண்டும் என்று பயங்கர முஸ்தீபு எடுத்தீர்கள். "பிப்ரவரி 87" மாநாட்டு அறிவிப்பிற்கு "மக்கஸூ சலபி சார்பாகவும்" நடைபெறுகிறது என்று போடச் சொன்னீர்கள். அது சமயம் அதற்கு காரணம் கேட்டபொழுது, அவ்வாறு போட்டு விட்டால் நான் ஊர் போய் சமாதானம் செய்து கொள்வேன் என்றீர்கள். நான் சொன்னேன்! பெயரை விளம்பரப்படுத்தி சமாதானம் வேண்டாம். அவர்களின் கொள்கை தவறு என்று உணர்ந்து வேண்டுமானால் இணையட்டும் என்றேன். அது சமயம் தாங்கள் "சலபி" இல்லையெனறால் நான் இல்லை என்று கூறியதுடன் நான் அவ்விடத்தை விட்டு நீங்கினேன். அதன் பிறகு சகோதரர் குத்புத்தீன் இனிமேல் "சலபி" Chapterஐ குளோஸ் செய்யுங்கள். இனிமேல் அது நமக்கு வேண்டாம் என்று கூறியது ஞாபகம் இருக்கும்.

அதற்கு முன்பாக அபூ அப்தில்லாஹ் "மர்கஸ் சலபி Branch No. 2" என்று ஒரு போர்டு அவர் கடையில் மாட்டி வைக்கும்படி எழுதுங்கள் என்று எங்கள் இருவரிடமும் (நான் & A.NK) டாக்டர் மெஹ்பூபுர் ரஹ்மானுடைய மகனுக்குக் கொடுத்த அகீகாவில் கலந்து கொண்டு வரும் பொழுது கூறினீர்கள். அப்பொழுதும் நான் வெடித்தேன். இன்னொரு சமயம் Plotஐ Real Estate அமைத்து விற்க வேண்டும் என்ற நிலை வரும்பொழுது "Salafi Real Estate" என்று ரெஜிஸ்டர் செய்யச் சொன்னீர்கள். இவை அத்துணைக்கும் "ஒலிப்பதிவு நாடா" உள்ளதா? என்று கேட்க நினைக்கலாம். அதற்கு இல்லை என்பது தான் என் பதில். அல்லாஹ்வால் ஏற்படுத்தப்பட்ட ஒலிப்பதிவில் பதிவாகி உள்ளது. இன்ஷா அல்லாஹ் மறுமையில் கேட்கலாம். இறுதியாக செயற்குழுக் கூட்டத்தில் சகோதரர் குத்புத்தீனுடன் மோதினீர்கள். அது சமயம் "ஊரில் இவரைப் போல் பத்து பைத்தியக்காரன் கூறுகிறான். இவர் என்ன கூடுதலாகப் படித்து விட்டாரா? எத்தனைக் கிதாபுகளைப் படித்து விட்டார்?.............." என்று இன்று நம்மைப் பார்த்து குராபாத்காரர்களும், பித்அத்வாதிகளும் கூறுவது போல் கூறினீர்கள்.

அதன் பிறகு சகோதரர் அபூ அப்துல்லாஹ் வந்த பிறகு இந்த "சலபி" விவகாரத்தை Close Doorல் முடித்துக்

கொள்ளலாம் என்று அவர் கூறியதை ஏற்காமல் ஏதோ தாங்களிடம் பெரிய ஆதாரம் இருப்பது போல் "அல்கயாம் ஹோட்டலில்" விருந்துடன் பொதுக் குழுவைக் கூட்டினீர்கள். அது சமயம் ஏற்கனவே ஏப்ரல் 86-ல் சகோதரர் அபூ அப்துல்லாஹ் விட்ட சர்குலருக்கு மூன்று பக்க மறுப்புரை எழுதி வாசித்தீர்கள். அது சமயம் தாங்களின் சலபியிஸத்தை நிலைநாட்ட குர்ஆன் ஆயத்தையே மாற்றி அர்த்தம் கூறினீர்கள். தாங்களின் சலபியிஸத்தை நிலைநாட்ட தாங்கள் சொந்தக் கருத்தை சொல்லியிருக்கலாம். ஆனால் குர்ஆன் ஆயத்தை மாற்றியது பெரும் குற்றமா இல்லையா? என்பதை தற்சமயம் சிந்தியுங்கள். அந்த முனாழரா நடந்த சமயத்தில் தாங்கள் உண்மையை உணர முடிந்திருக்காது. காரணம் நம்மிடம் பயின்றவர்கள், ஆலிம் அல்லாதவர்கள் நம் கொள்கையை எதிர்ப்பதா என்ற வரட்டுக் கர்வம் மேலோங்கி இருந்தது. அதனால் தாங்கள் தயாரித்த அந்த பிரசுரத்தை தற்சமயம் எந்த விருப்பும் வெறுப்பும் இன்றி பார்த்து அதில் தாங்கள் செய்து இருக்கும் தவறை அறிந்து, அந்தத் தவறை பொது மக்களிடையே செய்ததால், அந்தப் பொது மக்களிடையே நான் கூறியது தவறு என்று எடுத்துக் கூறி அல்லாஹ்விடம் பாவ மன்னிப்புக் கேளுங்கள்.

உங்களுக்கு சலபியிலிஸத்தை குர்ஆன், ஹதீஸ் கொண்டு நிரூபிக்க முடியாது என்பது நன்றாகப் புரிகிறது. ஆனால் அன்று ஃபிர்அவ்னிடம் காணப்பட்ட அதே நிலைதான் இன்று உங்கள் நிலை; அல்லாஹ் காப்பாற்றுவானாக! அவனும் தன்னைச் சுற்றியுள்ளவர்கள் தன்னை, தன் மகிமையைக் குறைவாக எண்ணிவிடக் கூடாதே என்று தான் ஈமான் கொள்ளவில்லை. ஈமான் கொள்ள வேண்டும் என்ற தாகம் இருந்ததால்தான் கடைசி நேரத்தில் அல்லாஹ்வின் வேதனை இறங்கிய சமயத்தில் ஈமான் கொண்டான். ஆனால் அல்லாஹ் ஏற்கவில்லை. அதனால் நான் வேண்டிக் கொள்வது பதவி, பட்டம் இவற்றை விட்டு விட்டு மறுமையில் அல்லாஹ்வைப் பார்ப்போம்; அவன் நாம் செய்த, சொன்ன அனைத்தையும் நமக்குப் போட்டுக் காட்டி அதற்குரிய கூலியை, தண்டனையைத் தருவான் என்ற எண்ணத்தை உருவாக்கி இனிமேலாவது செய்த தவறை தவறு என்று ஒத்துக் கொண்டு தீன் சேவையைத் தொடருங்கள்.

இதே அபூ அப்துல்லாஹ்வுக்காகத் தாங்கள் தூங்கி எழுந்தவுடன் எல்லாம் துவா செய்கிறேன் என்று பல முறை கூறியுள்ளீர்கள். ஆனால் இன்று சலபியிஸம் கூடாது என்றவுடன் அவரைத் "துரோகி" என்று வருணித்துள்ளீர்கள். நிச்சயம் அவர் மனிதர்களுக்கு துரோகியாவதைப் பொருட்படுத்தவில்லை. ஆனால் அல்லாஹ்வின் நேசத்தைத் தான் குறிக்கோளாகக் கொண்டுள்ளார் என்பதைத் தாங்கள் நன்கு அறிவீர்கள்.

எனவே இனிமேலாவது தவறை தவறு என்று உணர்ந்து திருத்திக் கொள்ளுங்கள். மேலும் நீங்கள் சொல்வதை அப்படியே ஏற்கும் ஒரு ஜமாஅத்தை உருவாக்காமல், தாங்கள் தவறு செய்யும் பொழுது அது தவறு என்று கூறும் ஜமாஅத்தை உருவாக்குங்கள். அதுதான் உங்கள் மறுமைக்கு நன்மை தரும். சம்சாக்களும், ஜால்ராக்களும் இவ்வுலகப் பட்டம் பதவிகளுக்குத்தான் பலன் தரும். மறுமைக்குப் பலன் தராது.

எனவே என் கடிதத்தை நன்கு தனிமையில் இருந்து படித்து சுயமாகவே சிந்தித்து, எதற்கும் விளக்கம் தர நினைத்தால் விளக்கம் தரவும். மனம் புண்படும்படி எந்த வாசகமும் இருப்பின் அல்லாஹ்வுக்காகப் பொறுத்துக் கொள்ளவும். நேற்று (08.01.1988) அன்று "Alfuttaim Masjid" இல் குத்பா பிரசங்கம் செய்தவர் பொறாமை என்ற தலைப்பில் பேசினார். அது சமயம் ஆலிம்களின் பொறாமையினால் கிட்டத்தட்ட 16,000 அபிப்பிராயப் பேதங்கள் உள்ளன என்று கூறினார். அதுபோல் அவர் சொல்ல நாம் என்ன கேட்பது; நாம் சொன்னதை அவர் என்ன மறுப்பது என்ற நப்ஸானியத்தை விட்டும் நாம் அனைவரும் நீங்கி யார் சொன்னாலும் குர்ஆன், ஹதீஸ் அடிப்படையில் சொன்னால், அதை ஏற்கத் தயாராக அல்லாஹ் நம் அனைவருக்கும் அருள் பாலிப்பானாக!

ஆமீன் யாரப்பல் ஆலமீன்

யா! "ரப்புல் அர்ஸில் அளீம்", அடியான், அல்லாஹ்வாகிய நான் ஒருவன்தான் அவன் துவாக்களுக்கு பதில் அளிப்பவன் என்பதைத் திடமாகக் கொண்டு யா! ரப்! என்று அழைத்தால், அல்லாஹ் துப்பக்க யா! அப்தி! என்று கூறுகிறான் என்று நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். எனவே அழைக்கத் தகுந்தவனே! உன்னையே நாங்கள் அழைக்கிறோம். அடியார்களின் உள்ளங்களை உன் விரல்களுக்கு இடையில் வைத்து புரட்டுபவனே! எங்கள் உள்ளங்களை இஸ்லாத்தின் பால் திருப்பி, தீனுல் இஸ்லாத்தைப் பிடித்துக் கொண்டு அதிலே நிலைத்து இருந்து மறுமையில் உன் அர்ஷின் நிழலில் தங்கி உன் பூரணச் சந்திர முகத்தைப் பார்க்க எங்களுக்கு அருள் புரி(யா) அல்லாஹ்! வ ஆகிர் தஃவாகும் அனில்ஹம்து லில்லாஹி ரப்பில் ஆலமீன்.

குறிப்பு : (1) 1985 அல்லது 1986 தொடக்கத்தில் சகோதர ஹாரூன் பாய் சம்பந்தப்பட்ட ஏழைக்குமா ஒன்றுக்கு 913/ திர்ஹம் வசூல் செய்தோம். அந்தத் தொகை தங்களிடம் தான் இருந்தது. அது கொடுக்கப் படாவிட்டால் அதை உரியவரிடம் ஒப்படைத்து விடவும்.

(2) 1985 அக்டோபரில் நடந்த மாநாட்டிற்கு இந்திய ரூபாய் 10,000/ வசூல் செய்தோம். அதை அது சமயம் பொறுப்பாயிருந்த 903 சகோதரர்கள் வசம் கொடுத்து வந்தீர்கள். அதை அவர்கள் எந்த நல்ல காரியத்திற்கும் செலவழிக்கவில்லை என்றால் அதை வாங்கி அந்நஜாத்திற்கோ, அல்லது உங்கள் IAC வெளியீடான "புரட்சி மின்னலுக்கோ" கொடுத்து விடவும். இந்த இரண்டு அமானிதங்களை தங்களிடம் ஒப்படைத்து விட்டேன்.

மற்றவை இன்ஷா அல்லாஹ் கடிதம் கண்டு பதில்.

இப்படிக்கு,
முஹம்மது மீரான்.

அந்நஜாத் மே 1993 இதழுடன் இணைக்கப்பட்டிருந்த "புரோகிதர்களைப் புரிந்து கொள்ளுங்கள்" என்ற இலவச இணைப்பு, பக்கம் 150.

## K.M. இக்பால் மதனி (KMI) பற்றி.....

KMI நம்மோடு தொடர்பு கொண்டது "எமது பல் சமய சிந்தனை" உரைக்குப் பின் 1985ல் என்று ஞாபகம். அப்போதும் அவர் 'ஸலபி' பிடிப்புடையவராக இருந்தாலும், துபையில் சகோதரர்கள் குத்புத்தீன், மீறான், முஹம்மது சுலைமான் மூவரும் ஒன்றுபட்டுச் செயல்படும் வரை அவர்களை மீற முடியாமலிருந்தார். எனவே அந்நஜாத் ஆரம்பிக்கும் முன் 'ஸலபி' விவகாரம் தலைதூக்கியபோது அவரால் அது பற்றிய அவரது விருப்பத்தை நிலைநிறுத்த முடியவில்லை. ஆனால் முஹம்மது சுலைமானை தன் பக்கம் இழுத்துக் கொண்ட பின்பு அவர் 'ஸலபி'யை நுழைக்கப் பல வகையிலும் முயற்சிகள் செய்தார். அது துபை ஜமாஅத்தின் பிளவுக்குக் காரணமாயிற்று. ஆரம்பத்தில் இதே சுலைமான் சாஹிப் இங்கிருந்து பேசி அனுப்பிய கேஸட்டில் இது பற்றிய எமது கருத்துக்களை தெளிவாகப் பேசி அனுப்பியுள்ளார். (அது 16ம் பக்கத்தில் பிரசுரமாகியுள்ளது) மேலும் அன்றே நாம் ஜாயின்ட் அக்கௌண்ட் வைக்கவே சொன்னோம். அவர்களே P.J. மேல் நம்பிக்கையில்லாமல் நிர்வாக விஷயத்தையும், பண விவகாரத்தையும் நான் மட்டுமே பார்க்கவேண்டும்; நான் மட்டுமே அதற்குப் பொறுப்பு என்று வற்புறுத்தி ஏற்பாடு செய்ததுடன், KMI பலமுறை இதனை போனிலும் வற்புறுத்தியுள்ளார். நாமே தெளிவாக ஜாயிண்ட் அக்கௌவுண்ட் வைக்கச் சொல்லி சுலைமான் சாஹிப் மூலம் பேசி அனுப்பியிருந்தும், அதற்கு மாற்றமாக நடைமுறைப்படுத்தப்பட்டதிலிருந்தே இதை எளிதாக உணரலாம்.

இப்படியெல்லாம் செய்து எப்படியும் எம்மை 'ஸலபி' கொள்கைக்கு வளைத்து விடலாம் என KMI நம்பினார் போலும்; அவர் நம்பிக்கையில் மண் விழுந்தவுடன் அவரது போக்கு கடுமையாக மாறியது. அதன் முதல் கட்டம் துபையில் சகோதரர்கள் குத்புத்தீன், மீறானுடன் மோதியது. அதன் விளைவு இ.இ.இயக்கத்தினர், IACயை விட்டு வெளியேறியதாகும். KMI ன் பிடிவாத 'ஸலபி' போக்கு காரணமாக நாம் துபை போய் அவருடன் எவ்வளவோ பேசியும் முடியாது போகவே, அவரும் நாமும் 'ஸலபி' முனாழரா நடத்துவதில் போய் முடிந்தது. அதன் விளைவு KMI க்கும் நமக்கும் இடைவெளி அதிகரித்ததாகும். துபை ஜமாஅத் மாதம் 6000/ வீதம் ஒரு வருடத்திற்கு அந்நஜாத்திற்கு உதவி நிதி அளிப்பதாக வாக்களித்து அனுப்பிக் கொண்டிருந்தனர். IAC அமைந்த பின்னும் தொடர்ந்து உதவித் தொகை வந்து கொண்டிருந்தது. ஆனால் நாம் அக்டோபர் 86ல் துபை போய் KMIயுடன் 'ஸலபி' முனாழரா நடத்தித் திரும்பிய பின் மூன்றாவது கட்டமாக அந்த உதவித் தொகையை அனுப்பாது நிறுத்திவிட்டார்கள். அந்நஜாத் IAC க்குரியது என்ற அவர்களது கூற்று உண்மையானால் மாதா மாதம் அனுப்பிக் கொண்டிருந்த உதவித் தொகை ரூ.6000/ஐ உடனடியாக நிறுத்தி இருப்பார்களா? அவர்களது (IAC) பத்திரிகை திடீரென்று பண நெருக்கடியால் நின்று விடுவதை அவர்கள் விரும்பியிருப்பார்களா?

உண்மை அதுவல்ல, மாதா மாதம் செலவுக்குரிய தொகையை நிறுத்தி நம்மைத் திண்டாடச் செய்ய வேண்டும். அதனால் பணத்திற்காகவது அவர்களது 'ஸலபி' கொள்கையை நிர்பந்த நிலையில் நாம் ஏற்றுக் கொள்வோம் என எதிர்பார்த்தார். அதே போல் நில விவகாரத்தில் அவர்களே இருந்து நேரில் பேசி A.முஹம்மது சுலைமான் கையாலேயே ஆரம்ப அட்வான்ஸ் ரூ.5000/மும், அதன் பின் அங்கிருந்து அனுப்பிக் கொடுக்கச் சொன்ன வகையில் ரூ.50,000/ ஆக ரூ. 55,000 அட்வான்ஸாகக் கொடுத்திருந்த நிலையில், நிலத்திற்கும் எங்களுக்கும் சம்பந்தமில்லை, அட்வான்ஸாகக் கொடுத்துள்ள பணம் ரூ.55,000/த்தை எங்களுக்குத் திருப்பித் தரவேண்டும் என்று நிர்பந்தப்படுத்தினர். அந்நஜாத் வெளிவருகிறதோ இல்லையோ? தங்கள் புரோகித இனம் கப்பாற்றப்பட வேண்டும் என்பதிலேயே குறியாக இருந்தார் இக்பால் மதனி.

எல்லாம் வல்ல அல்லாஹ் தனது சொந்த கிருபையைக் கொண்டு அந்நஜாத் தடைப்படாமல் வெளிவர அருள் புரிந்தான். அந்நஜாத் தடைபடாமல் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருந்தவுடன் நாலாவது கட்டமாக மவ்லவிகள் அனைவரும் சேர்ந்து கொண்டு அந்நஜாத்தைக் கைப்பற்றும் சதித் திட்டங்களில் இறங்கினர். இக்பால் மதனி துபையிலிருந்து இந்தியா வந்து இறங்கிய 2.2.1987லிலிருந்து இங்குள்ள தவ்ஹீத் மவ்லவிகள், படித்த பட்டதாரிகள், செல்வந்தர்கள் அனைவரையும் சேர்த்துக் கொண்டு சதித்திட்டங்கள் பல தீட்டி, நம்மை அந்நஜாத்தை விட்டு வெளியேற்ற, பகீரத பிரயத்தனங்கள் செய்தார். சதிகள் பல தீட்டினார். அல்லாஹ் அவை அனைத்திலும் அவர்களுக்குப் பெருத்த தோல்வியைக் கொடுத்தான். ஆக 16.2.87ல் நம் கையிலிருந்து பறிக்கப்பட்ட அந்நஜாத் நிர்வாகம், மீண்டும் 29.3.87ல் நம் கையிலேயே அவர்களைக் கொண்டே வந்து சேர்ந்தது.

ஐந்தாவது கட்டமாக வேறு வழியின்றி தவ்ஹீது மவ்லவிகள் அனைவரும் அவர்களது ஆதரவாளர்களுடன் எம்மை விட்டு வெளியேறி புரட்சி மின்னலை தத்து எடுத்துக் கொண்டு, அமானித மோசடி, பிறருக்குச் சொந்தமானதைத் தனதாக்கிக் கொள்ளல் என்றெல்லாம் அவதூறு பரப்ப ஆரம்பித்தனர். எப்படியாவது நம்மைப் பற்றி தப்பெண்ணம் ஏற்படுத்தி, அந்நஜாத்தை தலைதூக்காமல் ஆக்கிவிடலாம், அதன் மூலம் புரோகித ஒழிப்பு முயற்சியைக் கழுத்தை நெறித்துக் கொன்று விடலாம், தங்களது புரோகித இனத்தை காப்பாற்றிக் கொள்ளலாம் என கனவு கண்டு வருகின்றனர்.

துபை ஜமாஅத்(ஆரம்பத்தில் இ.இ.இயக்கம் பின் இணைந்து IAC) அந்நஜாத் வகைக்குக் கொடுத்த மொத்தத் தொகை ரூ. 54,000/ ஆகும். ஆனால் மவ்லவி வர்க்கத்திற்கென்று அந்நஜாத்திலிருந்து செலவிட்ட தொகை 57,701/ மேலதிகமாகச் செலவிடப்பட்டுள்ளது. நில வகைக்குக் கொடுத்தது 55,000/ ஆக மொத்தம் 10,9000/ நில வகைக்குரிய ரூ. 55,000/ ஒரு வருட காலக் கெடுவில் கொடுத்துத் தீர்க்கவேண்டியது. IAC யினர் அந்நஜாத்திற்கு சந்தா (உள்நாடு, வெளிநாடு) தனிப்பிரதிகள் விற்ற வகையில் தரவேண்டிய பணத்தை அவர்கள் வாக்களித்தபடி தராமல் நிறுத்தி வைத்துக் கொண்டதால் கொடுக்கப்படாமல் இருந்தது. இந்த அற்பத் தொகைக்காக வேண்டித்தான் 86-87ல் சமுதாயத்தில் ஏற்பட்டுக் கொண்டிருந்த பிரம்மிக்கத்தக்க மறுமலர்ச்சியைப் பாழாக்கி

ஜமாஅத்தை இரண்டாக உடைத்ததாக அவர்களது வாக்குமூலம். இதனை KMI அல்முபீன் ஏப்.92 இதழில் எழுதியுள்ளவை மேலும் அம்பலப்படுத்துகின்றன. 1987ல் வெளியேறியவர்கள் இன்றுவரை அமானித மோசடி என்று அவதூறு பரப்பிக் கொண்டிருக்கின்றனர்.

இதிலும் பெரிய வேடிக்கை 1987ல் நமக்குப் பொறுப்பில்லாத, நில வகையில் செலவிடப்பட்டிருந்த ரூ.21,593.75ஐ எம்மீது பழி சுமத்தி ஒரு சகோதரரிடமிருந்து வசூலித்துக் கொண்டனர். 1992ல் மீண்டும் அல்முபீன் ஏப்ரல் இதழில் பச்சை பொய்களை எழுதி அவர்கள் அந்நஜாத்திற்கு ஆரம்பத்தில் அன்பளிப்பாக இ.இ.இ., IAC இணைந்து கொடுத்திருந்த ரூ.54,000/ஐ இன்னொரு சகோதரரிடமிருந்து, பிரிந்த நிலையில் வசூலித்துக் கொண்டனர். யாரிடமிருந்தோ வசூலித்துக் கொண்டு அபூ அப்துல்லாஹ் தவறு செய்யப் போய்தானே இவை திருப்பிக் கொடுக்கப்பட்டன என்று நாக்கில் நரம்பில்லாமல் அவதூறு பரப்பி வருகின்றனர். கேவலம் வாந்தி எடுத்ததை திரும்பச் சாப்பிடுவது போல் அன்பளிப்பாகக் கொடுத்ததை திரும்ப வசூலித்துக் கொண்டு, அதிலும் வீராப்புப் பேசுகிறவர்கள் யாராக இருக்க முடியும்?

மேலும் அன்பளிப்பைக் கொடுக்கும்போது இ.இ.இ. அவர்களுடனிருந்தனர். அன்பளிப்பைத் திரும்ப வாங்கும் போது இ.இ.இ. அவர்களுடனில்லை. IAC மட்டும் அன்பளிப்பாகக் கொடுத்திருந்தாலும், அதனைத் திருப்பிக் கேட்கும் உரிமை அவர்களுக்கில்லை. இந்த நிலையில் அன்பளிப்புக்கு முக்கிய காரணமாக இருந்த இ.இ.இ. அவர்களுடனில்லாத நிலையில் அவர்களும் சேர்ந்து கொடுத்த அன்பளிப்பை K.M.I. திரும்ப வாங்கி இருக்கிறார் என்றால் அவரது தகுதியை அளவிட்டுக் கொள்ளுங்கள்.

அந்நஜாத்திற்கு ஆரம்பத்தில் கொடுத்த அன்பளிப்புத் தொகையை அவதூறு பரப்பி திரும்பப் பெற்றுக் கொண்டார்கள். இந்த நிலையில் அந்நஜாத்துடன் ஒட்டுதல் உரசுதல் ஏதும் அவர்களுக்கு இருக்க முடியுமா? அந்நஜாத்திற்கும் அவர்களுக்குமிடையில் இருந்து வந்த அந்த அற்ப உறவும் முறிந்துவிட்டது. இந்த நிலையில் அந்நஜாத் சம்பந்தப்பட்ட வரவு செலவு கணக்குகள், முடிந்த முடியாத சந்தா, நன்கொடை ரசீதுகள், விற்பனையாகாத பழைய பிரதிகள் இவற்றை வைத்துக் கொண்டு, அவற்றைத் தரமாட்டோம் என்று கூறுவதற்கு அவர்களுக்கு சிறிதளவேனும் உரிமை இருக்கிறதா? கொடுத்த அன்பளிப்பையே அதிலும் கொடுத்ததை விட அதிகமாக மவ்லவி–வர்க்கம் புரோகித வர்க்கம் சாப்பிட்டு விட்டு, மீண்டும் அந்த அன்பளிப்பையும் திரும்பப் பெற்றுக் கொண்டவர்கள், எந்த முகத்துடன் அந்நஜாத்துடைய உடைமைகளை வைத்துக் கொண்டு கொடுக்க மறுத்து வருகின்றனர். 16.07.1992 பேச்சில் எவ்வளவோ வற்புறுத்தியும் அவற்றைக் கொடுக்க மறுத்ததோடு, இறுதியில் அவற்றில் போட்டோ காப்பிகளைக் கொடுப்பதாக ஒப்புக் கொண்டனர். ஆனால் அவற்றையும் அவர்கள் இதுவரை நம்மிடம் ஒப்படைக்கவில்லை. அவற்றை அவர்கள் திரும்ப ஒப்படைக்க மறுப்பதற்கும் காரணமுண்டு. துபையில் அந்நஜாத் பிரதிகளை 2 திர்ஹம் என்றும் சந்தா உள்நாடு 10 திர்ஹம் என்றும் வெளிநாடு 50 திர்ஹம் என்றும் அந்நஜாத் ரசீது புத்தகங்களில் ரசீது போட்டு வசூலித்து விட்டு, பிரதி ரூ.2/ என்றும் சந்தா உள்நாடு ரூ.25/ என்றும் வெளிநாடு ரூ.150/ என்றும் கணக்குக் காட்டினார்கள். அதில் கொள்ளை லாபம் அடித்துள்ளனர்.

கமிஷன் வியாபாரிகளை விட மோசமாக நடந்து விட்டு அந்நஜாத்தில் உரிமையும் கொண்டாடிக் கொள்கிறார்கள். கமிஷன் வியாபாரிகளாவது கமிஷனை தெளிவாகப் பேசி நம்மிடமிருந்து வாங்கிக் கொண்டு அவர்கள் லாபம் வைத்து வியாபாரம் செய்கிறார்கள். இவர்களோ அந்நஜாத்திற்குப் பெரிதும் உதவி செய்வதாக வாக்களித்து விட்டு, அந்நஜாத்திடமிருந்து சந்தா, நன்கொடை ரசீதுகளைப் பெற்று அவற்றில் வசூலித்துவிட்டு, அந்த ரசீதுகளிலுள்ள உண்மையான கணக்குகளைக் காட்டாமல் மறைத்துக் கணக்குத் தீர்த்துள்ளனர். அதனால் தான் அந்த சந்தா, நன்கொடை ரசீது அடிக்கட்டைகளைத் திரும்பத் தர மறுத்து வருகிறார்கள். உபயோகித்ததைத் தான் கொடுக்க மறுக்கிறார்கள். உபயோகப் படுத்தப்படாத சந்தா, நன்கொடை ரசீதுகளையம், விற்பனை யாகாத தனிப் பிரதிகளையும் தர ஏன் அவர்கள் மறுக்கிறார்கள்? அதன் உண்மைக் காரணத்தை அல்லாஹ்வே மிக அறிந்தவன். இவை அனைத்திற்கும் KMIயே மூலகர்த்தாவாகும்.

இந்த அளவு ஆட்டம் ஆடி, அவதூறு பரப்பி, பச்சையாகப் பொய்களை எழுதித் தனது புரோகித புத்தியைக் காட்டிய K.M.I.க்கு I.A..Cயிலும், அல்முபீனிலும் நிலைத்திருக்க முடிந்ததா? அந்நஜாத்தை விட்டு அபூ அப்துல்லாஹ்வை விரட்ட அரும்பாடுபட்டவர், பெருந்திட்டங்கள் தீட்டியவர், அவர் தீட்டிய திட்டங்களுக்கு அவரே இன்று பலியாகி இருக்கிறார். எந்த IAC யையும், அல்முபீனையும் வைத்து ஆட்டம் போட்டாரோ அந்த IAC யின் சாதாரண ஒரு உறுப்பினராக இருக்கும் தகுதியையும் அவர் இழந்துவிட்டார். அல்முபீன் இதழுக்கு ஆசிரியராக இருந்தது போய் அவரது பெயர் அல்லது அவரது இனிஷியல், குறைந்தது அவரது குன்யத் பெயர் கூட அல்முபீனில் இடம் பெற முடியாத ஒரு சூழ்நிலையை வல்ல அல்லாஹ் உருவாக்கி விட்டான்.

1992 ஏப்ரலில் அல்முபீனில் கொக்கரித்தவர் அடுத்த ஏப்ரலுக்குள் அல்முபீனில் அட்ரஸ் இல்லாமல் ஆகிவிட்டார். இறுமாப்புடன் இதை நாம் எழுதவில்லை. சத்தியத்தை மறைக்க முயல்பவர்கள் யாராக இருந்தாலும், அது நாமாக இருந்தாலும் எல்லாம் வல்ல அல்லாஹ் அவர்களை விட்டு வைக்கமாட்டான். அவனது தண்டனை இங்கு தாமதமும் ஆகலாம்; அப்படியே தண்டிக்கப்பட்டாலும் அது மிகக் கடுமையாக இருக்காது. ஆனால் மறுமையில் பன்மடங்கு கடுமையான தண்டனை காத்திருக்கிறது. அநீதம் செய்தவர்கள் யாராக இருந்தாலும் அது நாமாக இருந்தாலும் அல்லாஹ் விட்டு விடப் போவதில்லை. எனவே தவ்ஹீது மவ்லவிகள் அனைவருக்கும், எமக்கும் செய்து கொள்ளும் உபதேசம் இதுதான். முடிந்தால் சத்தியத்தை நிலை நாட்டப் பாடுபடுங்கள். அதனால் அல்லாஹ்விடம் உங்களின் மதிப்பு உயரும். எக்காரணம் கொண்டும் சத்தியத்தை மறைக்க, அழிக்க முயற்சி செய்யாதீர்கள். சத்தியத்தை அழிக்க முற்பட்டால் நீங்கள் அழிந்து போவீர்கள். K.M.இக்பால் மதனிக்கு எமது பணிவான வேண்டுகோள்! உங்கள் தவறை உணருங்கள். சம்பந்தப் பட்டவர்களிடம் மன்னிப்புக் கேட்டு பகிரங்கமாக அறிவிப்பு வெளியிடுங்கள். அல்லாஹ்விடம் அழுது, தொழுது தௌபா(பாவ மன்னிப்பு) செய்யுங்கள். இல்லை என்றால் இங்கு அல்லாஹ் அளித்துள்ள தண்டனை லேசானது மறுமையில் தண்டனை மிகக் கடுமையாக இருக்கும். எனவே அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள்.

இவண்,

அபூ அப்தில்லாஹ்

# சகோதரர் K.M. இக்பால் மதனிக்கு அபூ அப்தில்லாஹ் எழுதிய கடிதம்!

திருச்சி-2.
03.07.1434
13.05.2013

*அஸ்ஸலாமு அலைக்கும்(வரஹ்) நலம். நலத்திற்கு துஆ செய்கிறேன்.*

துபை சகோதரர் மீரானின் விருப்பப்படி அவருடன் உங்களின் நோய் விசாரிக்க உங்களின் வீடு தேடி 3.2.2013 ஞாயிறன்று வந்தோம்.

பரம எதிரியே வீடு தேடி வரும்போதும் ஒரு உண்மையான முஃமின் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று இறுதித் தூதர் கற்றுத் தந்தையே கடைபிடிக்காத உங்களின் நிலையை நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள். அன்று(3.2.2013) சந்தித்த உங்கள் மகனிடம் காணப்படும் இஹ்சான்-நற்குணம் உங்களிடம் இல்லையே என்பதுதான் வேதனைக்குரிய விசயம். இக்கடிதத்தையும் நான் எழுத முற்பட்டிருக்கமாட்டேன். அன்று நீங்கள் முறை தவறி பேசியதற்கு உடனடியாகத் தெளிவான ஆதாரத்துடன் மறுத்துப் பேசி இருக்க முடியும். ஆனால் இங்கிதம் கருதி அழகிய பொறுமையாக மௌனம் காத்தேன். ஆனால் அதையே உங்களின் ஆலிம் என்ற ஆணவப் புத்தி, அபூ அப்தில்லாஹ் என் வீட்டிற்கு வந்தார். நான் இவ்வாறு இவ்வாறெல்லாம் சொன்னேன். ஆனால் அவரோ வாயே திறக்கவில்லை. இதிலிருந்து என்ன தெரிகிறது? நான் சொன்னக் குற்றச்சாட்டுக்கள் அனைத்தையும் அபூ அப்தில்லாஹ் மௌனமாக ஏற்றுக் கொண்டார் என்பதுதானே என நீங்கள் தற்பெருமை அடிக்க முடியும். எனவே உங்களுக்கு உண்மை நிலையை உணர்த்தவே இக்கடிதத்தை 3 மாதங்கள் பொறுத்திருந்த பின்னர் வரைந்துள்ளேன். பலருக்கும் மின்னஞ்சல் செய்துள்ளேன்.

அதுவும் உங்கள் குற்றங்களை உணர்ந்து நீங்கள் மன்னிப்புத் தேடவும், அன்று நீங்கள் சொன்னது போல் வாய்க்குப் பூட்டுப் போடப்பட்டு உறுப்புகள் சாட்சி சொல்லும் போது நீங்கள் குற்றவாளியாக நிற்கக் கூடாதே என்ற நல்ல நோக்கத்துடன் மட்டுமே நீங்கள் மறந்து விட்ட சம்பவங்களை அல்லது மறந்து விட்டது போல் நடிக்கும் சம்பவங்களை இங்கு பட்டியலிடுகிறேன்.

1983 முதல் நான் வெளியிட்டப் பிரசுரங்கள் குறிப்பாக 30.10.1984ல் திருச்சி தூய சின்னப்பர் இறையியல் கல்லூரியில் “சமயங்களால் சமூகத்தில் ஏற்பட்டுள்ள சாதக பாதகங்கள்” என்ற தலைப்பில் நான் பேசியது, நூல் வடிவில் வெளிவந்து அவற்றைப் பார்வையிட்ட இஸ்லாமிய இளைஞர் இயக்கத்தின் (இ.இ.இ.) பொறுப்புத்தாரிகள் சகோதரர் குத்புத்தீன், சகோதரர் மீரான் இருவரும் முதன் முதலில் என்னோடு தொடர்பு கொண்டனர். அப்போது K.M.I. என்று ஒருவர் இருக்கிறார் என்பதே எனக்குத் தெரியாது. மேலும் 1962 எனது 20 வயதிலிருந்து 1983 41 வயது வரை தப்லீகில் முழுமையாக ஈடுபட்டிருந்ததால் உங்களை அறிந்து கொள்ளும் வாய்ப்பும் கிடைக்கவில்லை. அப்போது முஜாஹித், அஹ்ல ஹதீஃத், ஜ.இ. போன்ற அமைப்புகள் தமிழகத்தில் இருந்தும் கூட, அவர்கள் பல முறை தங்கள் அமைப்பில் இணையுமாறு வற்புறுத்தியும் கூட நான் ஏற்கவில்லை. காரணம் பிரிவுகள் இல்லாமல் இஸ்லாம் இல்லை என்றால், புதிய பிரிவுகளான இவற்றை விட, பழைய பிரிவான மத்ஹபுகளே மேல் என்ற எண்ணத்தில் ஷாஃபி மத்ஹபில் நிலைத்திருந்தேன்.

மவ்லவிகளின் ஆணவம், பொய்ப் பித்தலாட்டம், மற்றும் பலவித ஒழுக்கக் கேடுகள் என அவர்களின் இழி குணங்கள் திட்டமாகத் தெரிய வந்த பின்னரே அவர்கள் மீதுள்ள நம்பிக்கையை இழந்து, குர்ஆன் அரபி கற்ற மவ்லவிகளுக்கு மட்டுமே விளங்கும் என்ற அவர்களின் பூச்சாண்டியை குப்பையில் எறிந்து விட்டு நேரடியாக குர்ஆன் மொழி பெயர்ப்புகளைப் படித்துச் சிந்திக்க ஆரம்பித்த பின்னரே சத்திய மார்க்கம்-நேர்வழி இதுதான் என்பது எனக்குச் சந்தேகத்திற்கு இடமில்லாமல் தெரியவந்தது.

இந்த உண்மையை 30.10.1984ல் திருச்சி சின்னப்பர் இறையியல் கல்லூரியில் நான் நிகழ்த்திய “சமயங்களால் சமூகத்தில் ஏற்பட்டுள்ள சாதக பாதகங்கள்” உரையில் தெளிவாக விளக்கியுள்ளேன். அவ்வுரை நூல் வடிவிலும் வெளியானது. அந்நூலையும், மற்றும் எனது இதர பிரசுரங்களையும் பார்த்துவிட்டே துபை இ.இ.இ. சகோதரர் களான குத்புத்தீன், மீரான், இங்கு S.K., P.J. போன்றோர் என்னைத் தொடர்பு கொண்டனர். அந்த நூலிலேயே நான் சமுதாயத்தில் ஆலிம் அவாம் வேறுபாடு இல்லை; மார்க்கத்தைப் பிழைப்பாகக் கொண்டு சம்பளத்திற்கு மார்க்கப் பணிபுரிவதால்தான் சகலவிதமான சீர்கேடுகளும் இணை வைப்புகளும் ஏற்படுகின்றன என்பதை விளக்கி இருக்கிறேன். நீங்கள் அறிவாளியாக இருந்தால் அந்நூலைப் பார்த்தவுடனேயே எனது நிலையை நீங்கள் விளங்கி இருக்க முடியும். உங்களை எனக்கு அறிமுகப்படுத்தியவர்களே சகோதரர்கள் மீரானும், குத்புத்தீனும் தான். அப்போது நீங்கள் துபையில் அவர்களுக்கு உஸ்தாதாக இருந்தீர்கள். அதன் பின்னர் திருச்சியில் சில பள்ளிகளில் உங்களுடன் சில நிகழ்ச்சிகள் நடத்தியது உங்களுக்கு நினைவு இருக்கலாம். அந்தச் சந்தர்ப்பங்களிலும் இஸ்லாத்தில் மத்ஹபு பிரிவுகளுக்கு எப்படி அனுமதி இல்லையோ அதேபோல் ஸலஃபி பிரிவுக்கும் அனுமதி இல்லை என்று தெளிவாக எனது கருத்தை உங்களிடம் எடுத்து வைத்துள்ளேன்.

1986-ல் அந்நஜாத் ஆரம்பிக்கும்போது IAC என்ற பிரிவுப் பெயர் கற்பனை செய்யப்படவில்லை என்பதும் உங்களுக்குத் தெரியும். இ.இ.இ. அமைப்பு மூலம்தான் அந்நஜாத் ஆரம்பிப்பது பற்றிய தகவல் அவர்களின் லெட்டர் பேடில் எழுதப்பட்டு குத்புத்தீன் மற்றும் ஒருவர் கையெழுத்திட்டு எனக்குக் காய்கறி சுலைமான் மூலம் கிடைத்தது. அது இன்றும் பாதுகாப்பாக ஆதாரமாக இருக்கிறது. இந்த நிலையில் “ஸலஃபி” இல்லை என்றால் நான் நஜாத்தில் இல்லை என்று நீங்கள் துபையில் சொல்லிக் கொண்டிருந்தத் தகவலும் எனக்குக் கிடைத்தது.

எனவே இ.இ.இ. பிரதிநிதியாக என்னிடம் வந்த காய்கறி சுலைமானிடம் அந்நஜாத்தை ஆரம்பிக்க நான் தயக்கம் காட்டினேன். அப்போது காய்கறி சுலைமான் எனக்குக் கொடுத்த உத்திரவாதம் என்ன தெரியுமா? நான் துபை சென்று K.M.I. யை சரிகட்டுகிறேன். அப்படி அவர் ஒத்துவரவில்லை என்றால் அவரை ஒதுக்கிவிட்டு நான், மீரான், குத்புத்தீன் ஆகிய

மூவரும் உங்களுக்கு முழு ஒத்துழைப்புத் தருகிறோம் என்று உறுதி அளித்தார். மேலும் அந்நஜாத் எந்தப் பிரிவு அமைப்பைச் சார்ந்தும் வெளிவராது. ஒட்டுமொத்த முஸ்லிம் சமுதாய இதழாக மட்டுமே வெளிவரும் என்று தெளிவாகச் சொல்லியே ஆரம்பித்தேன். இதற்கு அல்லாஹ்வே சாட்சியாக இருக்கிறான்.

அதற்குக் காரணம் குமந்தான் பள்ளி மாடியில் வைத்து நஜாத் ஆரம்பிப்பது பற்றி ஒரு ஆலோசனைக் கூட்டம் நடந்தது. அதில் துபையிலிருந்து வந்திருந்த காய்கறி சுலைமான், உங்கள் மைத்துனர் பஷீர், இங்குள்ள பீ.ஜை., எஸ்.கே., முஜாஹித்கள், அஹ்ல ஹதீஸ்காரர்கள் ஆக அனைவரும் கலந்து கொண்டனர். முஜாஹித்களும், அஹ்ல ஹதீஸ்காரர்களும் சேர்ந்து மர்கசுஸ் ஸலஃபி என்ற ஓர் அமைப்பை ஏற்படுத்தி செயல்பட்டு வந்தனர். நஜாத் பத்திரிகையை மர்கசுஸ் ஸலஃபி சார்பாக வெளியிட வேண்டும் என்று பிடிவாதம் பிடித்தனர். அப்படியானால் நீங்களே நடத்திக் கொள்ளுங்கள். அதில் நான் ஒருபோதும் சம்பந்தப்படமாட்டேன் என்று உறுதியாகக் கூறிவிட்டு வெளியேறி வந்துவிட்டேன். அப்போதே என்னை விட்டுவிட்டு அவர்கள் அந்நஜாத்தை ஆரம்பித்திருக்கலாம். அதற்கு மாறாக காய்கறி சுலைமான், பீ.ஜை., எஸ்.கே. ஆகியோர் என் கடைக்கு வந்து நீங்கள் சொல்வதுதான் சரி. நஜாத் பத்திரிகையை மர்கசுஸ் ஸலஃபி வெளியீடாக வெளியிடுவதை நாங்களும் சரி காணவில்லை. நீங்கள் சொல்வதுபோல் எந்தப் பிரிவு அமைப்பையும் சாராமல் முஸ்லிம் சமூகத்தின் சார்பாக வெளியிடுவதைத்தான் நாங்களும் சரி காண்கிறோம் என்று உறுதி அளித்தனர்.

அப்போது காய்கறி சுலைமானிடம் நான், துபையில் K.M.I. ஸலஃபி இல்லை என்றால் நான் அதில் இல்லை என்று சொல்லிக் கொண்டிருக்கிறாரே என்று கேட்டேன். அப்போது அவர் உதிர்த்த வார்த்தையைத்தான் முன்னர் குறிப்பிட்டுள்ளேன். அப்படிச் சொல்லிக் கொண்டிருந்த நீங்கள், அதற்கு மாறாக குத்புத்தீன், மீறான், காய்கறி சுலைமான் மூவரும் ஒன்று சேர்ந்து விட்டால் உங்கள் செல்வாக்குச் சரிந்துவிடும் என்ற அச்சத்தில் நஜாத்துக்கு ஒத்துழைப்புக் கொடுப்பதாக நயவஞ்சகமாகக் கூறிக்கொண்டு உங்கள் சதிச் செயலை ஆரம்பித்தீர்கள்.

அந்நஜாத் ஆரம்பித்த பின்னர் புதிய பிரிவான IACயை ஆரம்பித்து அதன் தலைவராக காய்கறி சுலைமானை ஏற்படுத்தி அவரை அம்மூவரிலிருந்து பிரித்து உங்கள் ஆளாக ஆக்கிக் கொண்டீர்கள். அதன் பின்னர் அந்நஜாத்தில் ஸலஃபியை நுழைக்க பெரும் பாடுபட்டீர்கள். உங்கள் தொடர் முயற்சியின் காரணமாக உங்களுக்கும், குத்புத்தீன், மீரான் சகோதரர்களுக்குமிடையே கருத்து வேறுபாடு முற்றி, நீங்கள் அவர்களை அசிங்கமாகப் பேசிப் பிளவை ஏற்படுத்தினீர்கள்.

அச்சகோதரர்கள் நடந்த சம்பவங்களை என்னிடம் கூறி என்னை துபைக்கு அழைத்தார்கள். நான் சரிகாண வில்லை. K.M.I. மூலமே என்னை துபைக்கு வரவழைக்க ஏற்பாடு செய்யுங்கள் என்று அவர்களிடம் கூறினேன். நீங்கள் கடுமையாக எதிர்க்கும் ஸலஃபி விவகாரமே பிளவுக்குக் காரணம். எனவே K.M.I. நீங்கள் துபைக்கு வருவதை ஒருபோதும் சரி காணமாட்டார் என்றனர். அப்படியானால் நீங்கள் K.M.I.யிடம் என்னை துபைக்கு வரவழைப்பதைத் தெரியப்படுத்திவிட்டே ஏற்பாடு செய்யுங்கள் என்றேன். அதற்கும், அவர் ஒப்புதல் தரமாட்டார். மேலும் துபையில் அவருக்கிருக்கும் செல்வாக்கைக் கொண்டு நீங்கள் துபை வருவதைத் தடுத்து விடுவார் என்றனர். ஆலிம் என பெருமை பேசுவோரின் ஆணவ, அகங்காரப் போக்கை நான் நன்கு அறிந்து வைத்திருந்தால், நீங்கள் நான் துபை வருவதை சரிகாண மாட்டீர்கள் என்பதை விளங்கிக் கொண்டதாலும், உங்கள் IAC ஜமாஅத்திற்கு நான் எந்த வகையிலும் கட்டுப்பட்டவன் இல்லை என்பதாலும் உங்களுக்குத் தெரியமல் என்னை துபைக்கு அவர்கள் வரவழைப்பதை ஏற்றுக் கொண்டேன்.

துபையில் எனக்கும் உங்களுக்கும் இடையில் நடந்த ஸலஃபி விவாதத்தை மறந்திருக்கமாட்டீர்கள். ஒரு கட்டத்தில் என்னை விடப் படித்த ஆலிம் சொன்னால் ஏற்பேன் என்றீர்கள். நான் முகல்லிதுதான் என்றும் சொன்னீர்கள். திடீரென்று பல்டி அடித்து நான் முகல்லிது இல்லை என்றீர்கள். இறுதியில் நாம் முஸ்லிம்கள்தான், ஸலஃபி இல்லை என்று நயவஞ்சகமாகக் கூறி, நான் கொண்டு வந்து மக்களிடம் விநியோகித்த “ஸலஃபி” பிரசுரங் களை உங்கள் அபிமானிகளை விட்டுத் தந்திரமாக உடனடியாக திரும்ப வாங்கிக் கொள்ள வைத்தீர்கள். அடுத்த நாள் காலையில் மீண்டு நான் ஸலஃபிதான் என்று வேதாளம் முருங்கை மரத்தில் ஏறுவது போல் ஏறினீர்கள். மவ்லவிகளின் பிடிவாத நயவஞ்சக ஆணவப் போக்கை நான் அறிந்து வைத்திருந்ததால் அதில் ஆச்சரியப்படவில்லை.

நீங்களாவது நான் ஸலஃபி இல்லை, முஸ்லிம்தான் என்று விவாதத்தில் ஒப்புக் கொண்டீர்கள். நானோ எந்த நிலையிலும் ஸலஃபியை ஏற்றுக் கொண்டவனில்லை. இந்த நிலையில் அந்நஜாத்தை எப்பொழுது நீங்கள் கேட்டாலும் உடனே உங்களிடம் கொடுத்துவிடுவதாகப் பலமுறை நான் சொன்னதாகச் சகோதரர் மீரானிடம் ஆகாசப் பொய்யைக் கூறி இருக்கிறீர்களே! உங்களை எந்தப் பட்டியலில் சேர்ப்பது? அதுவும் அந்நஜாத் ஆரம்பத்திலிருந்து, உங்கள் சதித் திட்டங்கள் அனைத்தையும் நன்கு அறிந்துள்ள சகோதரர் மீறானிடமே இப்படி அண்டப் புளுகு புளுகி இருக்கும் நீங்கள் மற்றவர் களிடம் எப்படிப்பட்ட ஆகாசப் பொய்களை, அவதூறுகளைப் பரப்புவீர்கள் என்பது சொல்லித் தெரிய வேண்டுமா? 7:38–41 2:89,159–162, 7:44, 11:18, 13:25, 28:42, 40:52, 3:61 இறைவாக்குகள் மீண்டும் மீண்டும் படித்து அறிவு பெறுங்கள்.

இத்தனைக்கும் நீங்கள், பீ.ஜை., எஸ்.கே. சையது முஹம்மது, ஊட்டிகான், மற்றும் மவ்லவிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து கொண்டு, செல்வந்தர்களான 903, கோவை கோயா, சென்னை உஸ்மான், ரபீக் அஹ்மது போன்றோரையும் கூட்டுச் சேர்த்துக் கொண்டு அந்நஜாத்தைக் கைப்பற்றப் பெரும் சதித்திட்டங்கள் தீட்டி முயன்றும் தோல்வியடைந்து, அதன் பின்னர் என்மீது அமானித மோசடி, பணமோசடி என எண்ணற்ற அவதூறுகள் கூறி, மவ்லவிகளைப் பெரும்பான்மையினராகக் கொண்டு அட்ஹாக் கமிட்டி அமைத்து அந்நஜாத்தை என்னிடமிருந்து பறித்துக் கொண்டீர்கள்.

அட்ஹாக் கமிட்டி விசாரணை முடிவில் மவ்லவிகளாகிய உங்களின் அவதூறுகள் அனைத்தும் புஸ்வானமாகி அந்நஜாத்திற்கான வரவுகள் அனைத்தும் முழுமையாக முறையாக வரவு வைக்கப்பட்டுள்ளன. செலவுகளும்

*முறையானவை என்று ஒப்புக்கொண்டு கையெழுத்திட்டுக் கொடுத்து, முகத்தில் கரியைப் பூசிக் கொண்டு அந்நஜாத்தை மீண்டும் என்னிடம் ஒப்படைத்தீர்கள். மேலும் அந்நஜாத்தில் செலவிடப்பட்டவை அனைத்தும் உங்கள் மவ்லவி வர்க்கத்தினருக்கே. அதில் ஒரு பைசா கூட நான் சம்பளமாகவோ, கமிஷனாகவோ, அன்பளிப்பாகவோ பெறவில்லை என்பதும் அட்ஹாக் கமிட்டி விசாரணையில் உறுதியாயிற்று.*

*ஆக அந்நஜாதைக் கைப்பற்றும் உங்கள் முயற்சிகள் அனைத்தும் தோல்வியுற்று முகத்தில் கரியைப் பூசிக் கொண்டீர்கள். மேலும் மார்க்கத்தை குர்ஆனுக்கு முரணாகப் பிழைப்பாகக் கொள்ளும் உங்களின் புரோகிதத்தை வளர்க்க அந்நஜாத்தில் அணுவளவும் இடமில்லை என்பதை அறிந்து கொண்டே மவ்லவிகளாகிய நீங்கள் அனைவரும் அந்நஜாத்தை விட்டு வெளியேறினீர்கள்.*

*ஆக வரவு செலவு கணக்குகள் அனைத்தும் சரியாக இருக்கின்றன. பண மோசடி, அமானித மோசடி எதுவும் நடைபெறவில்லை என்று உங்கள் மவ்லவி வர்க்கமே ஒப்புக்கொண்டு எழுதி கையெழுத்திட்டுக் கொடுத்துவிட்ட நிலையில் 1987லிலிருந்து இன்று 2013 வரை மீண்டும் மீண்டும் அமானித மோசடி, பண மோசடி என்று அவதூறு பரப்பி வருகிறீர்களே! உண்மையில் மவ்லவிகளாகிய உங்களுக்கு ஈமான்–இறை நம்பிக்கை இருந்தால் இப்படி அவதூறு பரப்பி வருவீர்களா? அன்று அபூஜஹ்ல் வகையறாக்கள் எப்படிப்பட்ட இழி செயல்களை செய்து வந்தார்களோ அதே இழி செயல்களையே நீங்களும் சத்தியத்திற்கு எதிராக அடிபிசகாது செய்து வருகிறீர்கள். உங்கள் புரோகிதத் தொழிலைப் பாதுகாக்க விரும்புகிறீர்களே அல்லாமல் அதிலேயே குறியாக இருக்கிறீர்களே அல்லாமல் சத்தியத்தை–நேர்வழியை நிலைநாட்டும் நேர்மையான எண்ணம் மவ்லவிகளாகிய உங்களுக்கு கடுகளவும் இல்லை என்பதையே உங்களின் அவதூறு பிரச்சாரங்கள் உறுதிப்படுத்துகின்றன.*

*நீங்கள் சரிகாணும் “ஸலஃபி” பிரிவு ஜமாஅத்தை நான் சரிகண்டு ஏற்றிருந்தால், இன்று குர்ஆன், ஹதீஃத் மட்டுமே நேர்வழி–அல்லாஹ் அளித்துள்ள மார்க்கம் என்று பொய்யாகச் சொல்லிக்கொண்டு, 1987க்குப் பிறகு பலப் பிரிவு இயக்க ஜமாஅத்துகளாக மனமகிழ்வுடன் செயல்படும் ஜமாஅத்தினர் அடைந்துள்ள உலகியல் பட்டம் பதவி, சொத்து, சுகம், ஊடகங்களின் செல்வாக்கு, பிரபல்யம் இத்யாதி, இத்யாதி அனைத்தும் எனக்கே கிடைத்திருக்கும்.இதற்காகவே கேரளா, இலங்கை என என்னை அழைத்துச் சென்று காட்டவும் வைத்தீர்கள்.*

*இணை துணை இடைத்தரகு இல்லா ஏகன் அல்லாஹ் எனது பாதங்களை நேர்வழியில் ஸ்திரப்படுத்தி வைத்திருக்கா விட்டால் நானும் உங்கள் பக்கம் சாய்ந்திருப்பேன், அல்லாஹ்வே பாதுகாத்தான். நிச்சயமாக அவனுக்கே அனைத்துப் புகழும்.*

*அந்த ரப்புல் ஆலமீன் 21:92, 23:52 இறைவாக்குகளைக் கொண்டு ஒன்றுபட்ட ஒரே சமுதாயமே நேர்வழி என்பதையும், 21:93, 23:53–56, 3:103,105, 6:153,159, 30:32, 42:13,14, போன்ற இறைவாக்குகளின் மூலம் சமுதாயத்தை உலக ஆதாயங்களுக்காகப் பிரித்துக் கூறுபோட்டு, அவற்றை அடைவது கொண்டு மகிழ்வடைவது, மறுமையில் எப்படிப்பட்ட மிகமிகக் கொடுமையான நிரந்தர நரகத் தண்டனையைப் பெற்றுத் தரும் என்பதையும், அந்த கொடும் நரக வேதனைக்கு முன்னால் இவ்வுலகில் அடையும் மேற்கண்ட உலகியல் ஆதாயங்கள் அனைத்தும் அற்பமானவை. கணக்கில் வரமுடியாது என்றத் தெளிவையும், எனது எஜமான் அல்லாஹ்வே முழுமையாகத் தந்து என்னைப் பாதுகாத்ததால் மட்டுமே உங்களின் ஆசை வார்த்தைகளை விட்டும் நான் பாதுகாப்புப் பெற்றேன். அல்ஹம்துலில்லாஹ்.*

*துபையில் என்னை ஆகா, ஓகோ என வரம்பு மீறிப் புகழ்ந்து, பலவிதமான ஆசை வார்த்தைகளைச் சொல்லி உங்களது வழிகேடான ஸலஃபி கொள்கைக்கு என்னை வளைத்துப் போட அசாதாரண பெரும் முயற்சிகள் நீங்கள் செய்தும் அது பலனளிக்காததால், அடுத்து என்ன செய்தீர்கள் என்று நினைத்துப் பாருங்கள். பீ.ஜை. நம்பிக்கையானவர் இல்லை; தொட்டாச் சினுங்கி அவரை நிர்வாகத்தில் சம்பந்தப்படுத்த முடியாது; காசோலைகளில் நீங்களும், பீ.ஜை.யும் கையெழுத்துப் போட வேண்டும் என்று நீங்கள் சொல்வது சரியில்லை. நீங்கள் மட்டும் தான் கையெழுத்திட வேண்டும் என்று வற்புறுத்தி என்னை வளைத்துப் போட நினைத்த நீங்கள், உங்கள் முயற்சியில் படு தோல்வி அடைந்த பின்னர் எப்படி நடந்து கொண்டீர்கள் என்பதை நினைத்துப் பாருங்கள். நான் துபையிலிருந்து திரும்பி வந்த பின்னர், நீங்கள் 1987 ஜனவரியில் ஊர் வந்தவுடன் என்ன செய்தீர்கள்? பீ.ஜை.யை தனிமையில் கூப்பிட்டுப் பேச முற்பட்டீர்கள். அப்போது அவர் உங்கள்மீது நம்பிக்கை இல்லாமல் என்னிடம் வந்து K.M.I. என்னைக் கூப்பிடுகிறார். அவர்மீது எனக்கு நம்பிக்கை இல்லை. உங்களது மினி டேப்ரிக்காடரைத் தாருங்கள். அவரோடு பேசுவதை பதிவு செய்து கொண்டு வருகிறேன் என்று கூறி வாங்கிவந்தார். அதில் அவர் உங்களோடு பேசியது பதிவாகவில்லை. அதற்கு மாறாக அல்லாஹ்வின் அருளால் என்னைப் பற்றி பெரும் அவதூறுகள் கூறி பதிவானதே உங்கள் அணியினரைக் கொண்டே என் கைக்கு வந்தது.*

*உங்களிடம் வந்த அவரிடம், அபூ அப்தில்லாஹ் நம் இழுவைக்கு வருவதாக இல்லை; பிடிவாதமாக இருக்கிறார். எனவே அவர் நிர்வாகத்திலுள்ள அந்நஜாத்தைக் கைப்பற்றி உங்களிடம் ஒப்படைத்து விடுகிறோம். நீங்கள் தான் ஆல் இன் ஆல். முழு சுதந்திரத்துடன் நீங்கள் அந்நஜாத்தை நடத்தலாம் என்று பல ஆசை வார்த்தைகளாகக் கூறி உங்கள் கைக்குள் போட்டுக் கொண்டதை மறந்து விட்டீர்களா? அவரை அல்லாமா ஜைனுல் ஆபிதீன் என்றும் இன்னும் பலவிதமாக புகழ்ந்து பாராட்டியதையும் மறந்து விட்டீர்களா? புரோகிதத்திற்கு அணுவளவும் நான் வளைந்து கொடுக்காத காரணத்தால், பீ.ஜை.யும் அவரோடிருந்த மவ்லவிகளும் என்மீது அதிருப்தியாக இருந்தது உங்களுக்குச் சாதகமாகி விட்டது. புரோகிதர்களான மவ்லவிகளும் உங்களுக்குத் துணை நின்றார்கள். நீங்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து கொண்டு கோவை, திருச்சி என நீங்கள் தீட்டிய சதித்திட்டங்களை மறந்து விட்டீர்களா? எப்படியும், எப்பாடுபட்டும், எப்படிப்பட்ட அவதூறுகளை வாரி இறைத்தும் அந்நஜாத்தை என் கட்டுப்பாட்டிலிருந்து அபகரித்து விட பகீரத பிரயத்தனங்கள் செய்தீர்கள் என்பதை மறந்து விட்டீர்களா?*

*1987 பிப்ரவரியில் திருச்சியில் நடைபெற்ற மாநாட்டிற்கு வந்திருந்த அனைவரிடமும், அபூ அப்தில்லாஹ் அந்நஜாத்திற்காக வந்த பணத்தை மோசடி செய்துவிட்டார். வரவு செலவில் பெரும் மோசடி நடந்துள்ளது. மவ்லவிகளாகிய எங்களை மதிப்பதில்லை என பலவிதமான அவதூறுகளைப் பரப்பினீர்கள். மாநாடு ஒழுங்காக நடக்க ஒத்துழைப்புத் தருவதற்கு மாறாகப் பலவித இடையூறுகளை ஏற்படுத்தி என்னை நிம்மதி இழக்கச் செய்தீர்கள். பலவித குழப்பங்களை ஏற்படுத்தி என்னை நிலை தடுமாற வைத்த அந்த நிலையில் சிலரை ஏவிவிட்டு அந்நஜாத்திற்காக 100/, 200/, 300/, 400/, 500/ என மாநாட்டுப் பந்தலில் கொடுக்க வைத்தீர்கள். மவ்லவிகளாகிய உங்கள் அனைவரது நோக்கம் நிம்மதியற்ற, தடுமாற்ற நிலையில் அத்தொகைகள் கொடுக்கப்பட்டால், நான் மறந்து அத்தொகைகளில் ஒன்றையோ, இரண்டையோ வரவு வைக்காமல் விட்டுவிடுவேன். அதையே பெரிது படுத்திக் குற்றம் சுமத்தி அந்நஜாத்தை என்னிடமிருந்து அபகரித்துவிடலாம் எனச் சதித் திட்டம் தீட்டினீர்கள். ஆனால் அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்; அந்தத் தடுமாற்ற நிலையிலும், குழப்ப நிலையிலும் கொடுக்கப்பட்டத் தொகைகளில் ஒன்றுகூட விடுபடாமல் வரவு வைக்கப்பட்டிருப்பதைப் பார்த்து மவ்லவிகள் அனைவரும் ஏமாற்றம் அடைந்தீர்கள். அப்படியும் என்மீது அபாண்டமாகப் பழி சுமத்தி அந்நஜாத்தைக் கைப்பற்ற முடியாமல் ஏமாற்றம் அடைந்தீர்கள். அத்தோடு விட்டீர்களா? அது தான் இல்லை!*

*தமிழகம், வெளி மாநிலங்கள், துபையிலிருந்தவர்கள் என அனைத்து வாசகர்களில் ஆரம்ப காலத்திலிருந்து அந்நஜஜாத் வளர்ச்சிக்குப் பாடுபட்டவர்களைக் கூட்டி என்னை அந்நஜாத்திலிருந்து வெளியேற்றிட உங்கள் அணியினர் சூழ்ச்சி செய்தனர். 3:54, 14:46, 27:50, 71:22 சூழ்ச்சி பற்றி அல்லாஹ் இந்த இறைவாக்குகளில் கூறி இருப்பது உங்களுக்கும் உங்கள் புரோகித அணியினருக்கும் படிப்பினையைத் தரவில்லை.*

*ஆரம்பத்திலிருந்து அந்நஜாத் வளர்ச்சிக்காக உழைத்தவர்கள் திருச்சியில் பலர் இருக்க அவர்களைப் புறக்கணித்துவிட்டு, பின்னால் இணைந்த மவ்லவிகளின் ஆதரவாளர்களைக் கூட்டி அவர்களின் ஆதரவோடு என்னை அந்நஜாத்தை விட்டு வெளியேற்றிட அரும்பாடுபட்டீர்கள் என்பதை மறந்து விட்டீர்களா? அப்படிப் பெரும் முயற்சி செய்தும் முடிவு என்னாயிற்று? உங்கள் அணியினரின் குற்றச் சாட்டுக்கள் அனைத்தும் பொய்யென நிரூபணமாகி, மீண்டும் என்னிடமிருந்து பறித்துக் கொண்ட பொறுப்புகளை உங்கள் ஆதரவாளர்களின் பிரேரனை மற்றும் ஒப்புதல் மூலம் என்னிடமே ஒப்படைக்கும் கட்டாயம் ஏற்பட்டதை நீங்கள் மறந்து விட்டீர்களா?*

*அந்நஜாத்தில் புரோகிதத்தை நுழைக்க நீங்கள் அடுத்தடுத்து செய்த முயற்சிகள் அனைத்தும் படுதோல்வியடைந்து, இறுதியில் வேறு வழியின்றி உங்கள் ஆதரவாளர்கள் அந்நஜாத்தை என்னிடம் ஒப்படைத்துவிட்டு அவர்களாகவே வெளியேறியதை மறந்துவீட்டீர்களா?*

*இவை அனைத்திற்கும் என்னிடம் உரிய ஆதாரங்கள் இருக்கின்றன. உண்மைக்குப் புறம்பாக இதில் எதையும் எழுதியிருந்தால் உரிய ஆதாரங்கள் கொண்டு உங்கள் தரப்பு நியாயத்தை நிலைநாட்ட முன்வாருங்கள். வீண் அவதூறுகளைப் பரப்பித் திரியாதீர்கள்.அது பெருங்குற்றம் என்று குர்ஆன் கூறுவதைப் புறக்கணித்துப் பாவியாகாதீர்கள்.*

*இப்படித் தெளிவான சான்றுகள் இருக்க "அந்நஜாத்தை எப்பொழுது நீங்கள் கேட்டாலும் உடனே உங்களிடம் கொடுத்துவிடுவதாகப் பலமுறை நான் சொன்னதாக" தார்ப்பாயில் வடித்தெடுத்த அண்டப் புளுகை, ஆகாசப் பொய்யை நீங்கள் அந்நஜாத்தின் ஆரம்பத்திலிருந்து மவ்லவிகளாகிய நீங்கள் அனைவரும் வெளியேறும் வரை அனைத்தையும் திட்டமாக அறிந்துள்ள சகோதரர் மீறானிடம் சொல்லி இருக்கிறீர்களே, உங்கள் உள்ளத்தில் ஈமான் இருந்தால் இந்தத் துணிச்சல் உங்களுக்கு ஏற்பட்டிருக்குமா?*

*1983லிலிருந்து பிரசுரங்கள் மூலமும் 1986 ஏப்ரலிலிருந்து அந்நஜாத் மாத இதழ் மூலம் ஆரம்பித்த, அப்போது நான்கு மத்ஹபுகளிலிருந்த முஸ்லிம் சமுதாயத்தை 3:103,105, 6:153,159, 30:32, 42:13,14 இறைக் கட்டளைகளுக்கு அடிபணிந்து ஒன்றுபட்ட ஒரே சமுதாயமாக்க எடுத்தப் பெரும் முயற்சியைச்சிதைத்துச் சீரழித்து, நான்கு மத்ஹபுகள் போதாதென்று அவற்றைப் பன்னிரண்டு மத்ஹபுகளாக்கிய பெருங் குற்றம் முதலில் உங்களையே சாரும். அதன் பின்னரே வரிசையாக காய்கறி சுலைமான், பீ.ஜை, எஸ்.கே, மற்றும் சில மவ்லவிகளைச் சாரும்.*

*அந்தச் சமுயாத ஒற்றுமை முயற்சி முஸ்லிம்களிடையே எந்த அளவு தாக்கத்தை உண்டாக்கியது என்பதற்கு இன்று உங்களின் புரோகிதக் கூட்டம் ஏழு, எட்டு மத்ஹபுகளைக் கற்பனை செய்தும், விதவிதமாகப் பெயரிட்டு மகிழ்ச்சி அடைந்தும் (பார்க்க: 23:53–56, 30:32) உங்கள் பிரிவுப் பெயர்களை அதிகமதிகம் பல வகைகளில் விளம்பரப் படுத்தியும் உங்கள் அனைத்து மத்ஹபினருக்கும் மக்களிடம் இருக்கும் பெயர் என்ன தெரியுமா? "நஜாத்காரன்"*

*இந்த "நஜாத்காரன்" என்ற பெயரால் உங்களில் சிலர் செய்த வன்முறைச் செயல்களுக்கும், வெடிகுண்டு கலாச்சாரங்களுக்கும் அந்நஜாத் மாத இதழை நடத்தும் நானும் பலிகடாவாக நேரிட்டது. சந்தேகப்பட்டவர்கள் அந்நஜாத் மாத இதழைப் படித்தும், எனது செயல்பாடுகளைப் பலரிடம் விசாரித்தும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் என்னைப் பற்றித் தெரிந்து கொண்ட பின்னரே, அதிலிருந்து விடுவிக்கப்பட்டேன்.*

*1987 ஆரம்பத்தில் நீங்கள் நடத்திய சதித்திட்டங்களே நான்கு மத்ஹபுகளாக இருந்த முஸ்லிம் சமுதாயம் 12 மத்ஹபுகளாவதற்கும், இஸ்லாமிய தீவிரவாதம், முஸ்லிம் தீவிரவாதி என்ற அவப்பெயருக்கும், எங்கு எப்படிப்பட்ட வன்முறைச் சம்பவம் நடைபெற்றாலும், அதற்கு முஸ்லிம் வாலிபர்களே பலிகிடா ஆக்கப்படுவதற்கும் நாளை மறுமையில் குற்றவாளிகளின் வரிசையில் முதல் ஆளாக இருப்பீர்கள் என்பதை நினைவூட்டுகிறேன்.*

*நீங்கள் அன்று சொன்னதையே சொல்லி முடிக்கிறேன். வாய்க்குப் பூட்டுப் போடப்பட்டு, உறுப்புகள் சாட்சி சொல்லும் போது இந்த உண்மைகள் நிச்சயம் வெளிவரும். இறப்பதற்கு முன் உங்கள் ஆலிம் ஆணவப் புத்தியை தவ்பா செய்து விட்டு, உங்களின் மேற்படி குற்றச் செயல்களுக்காக முதலில் சம்பந்தப்பட்டவர்களிடமும், பின்னர் அல்லாஹ்விடமும் மன்னிப்புக் கேட்டுத் திருந்தினால் தப்பினீர்கள். இல்லை முடிவை நாளை மறுமையில் நிச்சயம் பார்ப்பீர்கள். அல்லாஹ் போதுமானவன்.*

இப்படிக்கு,
உண்மையுள்ள